செ. கு. எண் :- 108                                                  நாள் :- 18-03-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.3.2012

சென்னை, திருவான்மியூர், L.B. ரோடு பாலம் அருகில் 16.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது மாநகர அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருவான்மியூரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. நிஷாந்த் என்கிற திருமாறன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த நிஷாந்த் என்கிற திருமாறன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான நிஷாந்த் என்கிற திருமாறன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9